14th November 1957]

Co-operative societies

* 167 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Co-operative and Credit Societies opened after 1st July 1955, year-war?

THE HON. SRI R. VENKATARAMAN : The number of Co-operative Societies started after 1st July 1955 yearwar are :

		From 1st July 1955 to 30th June 1956.	From 1st July 1956 to 30th June 1957.
Credit Societies	..	289	312
Non-credit Societies	..	228	307

SRI V. K. KOTHANDARAMAN : லேவாதேவி மசோதா வெகு விரைவில் அமுலுக்கு வர இருப்பதால், கிராமபுரத்திலும் நகரத்திலும் இருக்கிற மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே கிரெடிட் சொசைடிகளை அதிகமாக ஏற்படுத்த சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON SRI R. VENKATARAMAN : It is a suggestion which will be considered, Sir.

SRI M. JAGANNATHAN : இந்த கூட்டுறவு சங்கத்தில் எவ்வளவு ஷேர் கேபிடல் போட்டு நடத்துகிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI A. R MARIMUTHU : கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கவேண்டுமென்றால் ஒரு ஆயிரம் பங்குத்தொகை போடவேண்டியிருக்கிறது. இருநூறு ரூபாய் பங்குத் தொகை கட்டப்பட்டால் கிரெடிட் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்படுமா ? ஆரம்பிப்பது பலநோக்கு கூட்டுறவு நாணய சங்கங்களாக ஆரம்பிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி பொதுவாக ஒன்றும் செய்யமுடியாது. அந்தந்த ஊரில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் எந்த இடங்களில் நன்றாக வேலை செய்யுமோ அந்த இடங்களில் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கவேண்டும். ஆனால் குறைவான மூலதனம் போட்டு ஆரம்பிக்கப்பட்டது கூட்டுறவு சொசைடியாக இருக்காது என்ற காரணத்தால் சற்று அதிகமான பங்குத் தொகை வசூலிக்கவேண்டும் என்று சர்க்கார் கருதுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இம்மாதிரி நாட்டில் அதிகப்படியான கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கும்போது சென்டரல் பாங்க் ஏஜன்சி, சர்க்காருக்கும் ஜனங்களுக்கும் மத்தியில் குறுக்கிடுவதனால், டிபார்ட்மெண்டு சொசைடிகளை ஆரம்பிக்கும்பொழுது இது குறுக்கிடாமல் தடுப்பதற்கு சர்க்கார் தடை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கோவாப்ரேடிவ் சொசைடி ஆரம்பித்தால் மட்டும் எந்தவித லாபமும் இல்லை. அங்கத்தினர்களுக்கு நல்ல முறையில் கொடுப்பதற்கு முயற்சி செய்வார்கள். சென்ட்ரல் பாங்கு எந்த அளவிற்கு கடன் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குத்தான் கொடுக்கமுடியும்.

Harijan colonies in Bhavani taluk

* 168 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Works be pleased to state the number of Harijan Cheris that are situated in patta lands of private individuals in Bhavani taluk, Coimbatore district?